**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**

**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.56/2020**

**Deposition of Witness for : P.W.12**

**Name : திரு.டி.வினாயகமூர்த்தி**

**Father's Name :**

**Village :**

**Taluk :**

**Caste :**

**Calling :**

**Religion :**

**Age :**

எதிரி ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 10.07.2023.**

முதல் விசாரணை -

நான் தற்போது ஆற்காடு நகர காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 15.6.2019ஆம் ஆண்டு நான் ஆரணி நகர வட்டத்தில் காவல் ஆய்வாளராக பணியாற்றியபோது, 15.8.2019ஆம் தேதி இரவு 10 மணிக்கு சாமி த/பெ. கண்ணன், தஞ்சியப்பன் கோயில் தெரு, எட்டிவாடி கிராமம் என்பவர் நிலையம் சேர்ந்து கொடுத்த புகாரின்பேரில் களம்பூர் காவல்நிலைய உதவி ஆய்வாளர் திரு. அசோக்குமார் என்பவர் பெற்று களம்பூர் காவல்நிலைய குற்ற எண்.320/2019 பிரிவு 294(பி)324,302 இதச படி வழக்கு பதிவு செய்துள்ளார்.

மேற்படி வழக்கினை எனது புலன்விசாரணைக்கு வைத்ததை 16.8.2019ஆம் தேதி காலை 6.30 மணிக்கு சம்பவ இடமான தஞ்சியப்பன் கோயில் தெரு எட்டிவாடி வாதி சாமி நிலத்திடம் சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் முருகன் த/பெ. முத்து கவுண்டர், மணிகண்டன் த/பெ. சந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் அ.சா.ஆ.11.

பின்பு அதே சாட்சிகள் முன்னிலையில் மேற்கண்ட சம்பவ இடத்தில் இருந்து ரத்தம் தோய்ந்த மண் சிறிதளவும், சாதாரண மண் சிறிதளவும், எதிரி வாதியை தாக்கிய ரத்தம் தோய்ந்த நாட்டு தேக்கு மரக்கொம்பின் அடிப்பாகத்தை காலை 7 மணிக்கு சாட்சிகள் முன்னிலையில் மகசரில் கைப்பற்றினேன். கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 95 அ.சா.ஆ.12.

பின்பு 8.15 மணிக்கு ஆரணி அரசு மருத்துவமனைக்கு சென்று இறந்த கண்ணன் என்பவரின் பிரேதத்தின் மீது சாட்சிகள் மற்றும் பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் பிரேத விசாரணை மேற்கொண்டு பிரேத விசாரணை அறிக்கை பதிவு செய்தேன். பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.13.

பின்பு மேற்கண்ட பிரேதத்தினை பிரேத பரிசோதனைக்காக தலைமை காவலர் 1508 சிவக்குமார் என்பவர் மூலம் அனுப்பிக்கொண்டேன். 16.8.2019ஆம் தேதி மதியம் 1 மணிக்கு களம்பூர் அண்ணாசாலையிடம் தஞ்சியப்பன், த/பெ. மண்ணு கவுண்டர் என்பவரை கைது செய்து கைதிற்கான காரணத்தை தகவல் சொல்லிய பின்பு விசாரித்தபோது அவர்

தானாக முன்வந்து எவ்வித துன்புறுத்தலும் வற்புறுத்தலும் இன்றி 1.15 மணிக்கு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதனை சாட்சிகள் கதீஜா கிராம நிர்வாக அலுவலர் மற்றும் பாபு கிராம உதவியாளர் ஆகியோர் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன்.

ஒப்புதல் வாக்குமூலம் முன்னிலைக்கு எதிரியின் வீட்டின் அருகில் கடலை செடி மறைவிடத்தில் எதிரி எடுத்துஆஜர் செய்த உடைந்த மற்றும் கூர்மையான நாட்டு தேக்கு கொம்பின் பாகத்தின் ஒரு பகுதி ரத்தம் தோய்ந்திருந்தது அதே சாட்சிகள் முன்னிலையில் பகல் 2.30 மணிக்கு மகசர் தயார் செய்தேன். கைப்பற்றப்பட்ட பொருட்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டேன். படிவம் 95 அ.சா.ஆ.14.

பின்பு தலைமை காவலர் 1508 சிவக்குமார் என்பவர் வேலூர் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு பிறகு பிரேதத்தின் மீது இருந்த ரத்தம் படிந்த வெள்ளை கலர் கட் பனியன் ஒன்றும், ரத்தம் படியாத சிமெண்ட் கலர் அரைக்கால் சட்டை ஒன்றையும் தனி அறிக்கை மூலம் ஆஜர் செய்ததை பெற்று படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பிக்கொண்டேன். படிவம் 95 அ.சா.ஆ.15.

பின்பு எதிரியை கைது செய்த விவரத்தை அவரது உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து தக்க வழிகாவல் மூலம் நீதிமன்ற காவலுக்குட்படுத்தினேன். பின்னர் சாட்சிகள் சாமி, சேகர், வள்ளிக்கண்ணன், காமாட்சி, ரமேஷ், பழனி, முருகன், மணிகண்டன், கதீஜா, பாபு ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துக்கொண்டேன்.

பின்பு படிவம் 95 மூலம் கைப்பற்றப்பட்ட பொருட்களை நீதிமன்றம்

மூலம் ஆய்விற்கு அனுப்பினேன். பின்பு வாதி சாமி என்பவருக்கு சிகிச்சை அளித்த டாக்டர் ராஜராஜன் ஆரணி அரசு மருத்துவர் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து சான்று பெற்றேன். பின்பு இணை இயக்குனர் அசோக்குமார் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து உடல் உள்ளூறுப்பு ஆய்வறிக்கை மற்றும் குருதி வடிநீரியியல் ஆய்வறிக்கை மற்றும் உயிரியல் ஆய்வறிக்கை பெற்றேன். குருதி வடிநீரியியல் ஆய்வறிக்கை எண்ணிக்கை-2 அ.சா.ஆ.16. உயிரியல் ஆய்வறிக்கை எண்ணிக்கை-2 அ.சா.ஆ.17.

பின்பு வேலூர் அரசு மருத்துவமனை மருத்துவர் நாகேந்திரகுமார் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். ஸ்மிர்த்தி பானர்ஜி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்து சான்று பெற்றேன். தலைமை எழுத்தர் ஆரணி நீதித்துறை நடுவர் நீதிமன்றம் பாபு என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். தலைமை காவலர் 1508 திரு. சிவக்குமார் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

காவலர் 643 திரு. விஜயன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். களம்பூர் உதவி ஆய்வாளர் திரு. அசோக்குமார் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தும், உதவி இயக்குனர், குற்ற வழக்குகள் தொடர்வு திருவண்ணாமலை அவர்களிடம் கருத்துரை பெற்று இவ்வழக்கின் பிரிவு 294(பி) 324,307, 302 இதச படி பிரிவு மாற்றம் செய்தேன். பிரிவு மாற்ற அறிக்கை அ.சா.ஆ.18.

என்னுடைய விசாரணையை முடித்துக்கொண்டு 9.8.2019 அன்று எதிரி

**தஞ்சியப்பன் த/பெ. மண்ணு கவுண்டர், எட்டிவாடி கிராமம் என்பவர் மீது 294(பி),324,307,302 இதச படி இறுதி அறிக்கை தாக்கல் செய்துக் கொண்டேன்.**

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் காட்டப்பட்ட நிலங்களில் என்ன பயிர் செய்யப்பட்டது என்று காட்டப்படவில்லை என்றால் சரி தான். பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தில் விளக்கு சம்பந்தமான குறிப்பு உள்ளதா என்றால் குறிப்பு உள்ளது. ரயில்வே மின்கம்பம் காட்டப்பட்டுள்ளது. ரயில்வே மின்கம்பங்களில் மின்விளக்குகள் இருந்ததா என்றால் காட்டப்பட்ட இடத்தில் இருந்தது.**

**நான் காட்டப்பட்டுள்ள ரயில்வே மின்கம்பங்கள் மின்சார ரயில் செல்வதற்கான மின்கம்பங்களே தவிர மின்விளக்குகள் உள்ள மின் கம்பம் அல்ல என்றால் சரியல்ல. பார்வை மகசரில் மின்விளக்குகள் குறித்து குறிப்பிட்டு சொல்லப்பட்டுள்ளதா என்றால் மின்கம்பங்கள் என்று சொல்லப்பட்டுள்ளது. விளக்குகள் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளதா என்று எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டதற்கு மின்கம்பம் என்று காட்டியுள்ளேன் என்று சாட்சி சாட்சியம் அளித்துள்ளார்.**

**விளக்கு தொடர்பான குறிப்பு பார்வை மகசரிலும், மாதிரி வரைபடத்திலும் சொல்லப்படவில்லை என்றாலும், வழக்கிற்காக குறிப்பிடப்பட்டுள்ளதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ரயில்வே பால வேலைக்காக ஷெட் அமைத்து பணியாளர்கள் பணி செய்து வந்தார்கள் என்றால் கண்டெய்னர் மற்றும் ஒலைக்குடிசை இருந்தது. மேற்படி**

பணியாளர்கள் ஷெட் குறித்து பார்வை மகசர் மற்றும் வரைபடத்தில் சொல்லப்படவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

மேற்படி பணியாளர்களை இந்த வழக்கில் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் மேற்படி பணியாளர்கள் 4,5 பேர்கள் சம்பவ சமயத்தில் கண்டெய்னருக்குள் தூங்கிக்கொண்டிருந்ததால் அவர்கள் சம்பவத்தை பார்த்த சாட்சிகளாக இல்லாததால் விசாரிக்கவில்லை. விசாரிக்கப்பட்டார்களா என்றால் விசாரித்தேன். சம்பவத்தை பற்றி தெரியாது என்பதால் சாட்சியாக போடவில்லை. வாக்குமூலம் பதிவு செய்தேனா என்றால் பதிவு செய்யவில்லை.

பார்வை மகசர் மற்றும் வரைபடத்தில் தஞ்சியப்பன் நிலத்தில் வேர்க்கடலை பயிர் குறித்து சொல்லப்படவில்லை என்றால் தஞ்சியப்பன் நிலம் காட்டப்பட்டுள்ளது. வேர்க்கடலை பயிரானது தஞ்சியப்பன் வீட்டிற்கு பின்னால் உள்ள நிலத்தில் பயிரிடப்பட்டிருந்தது. கைப்பற்றுதல் மகசரில் தஞ்சியப்பன் வீட்டிற்கு அருகில் உள்ள கடலை செடி என்று தான் போடப்பட்டுள்ளது என்றால் சரி தான். மாதிரி வரைபடத்தில் தஞ்சியப்பன் வீடு தஞ்சியப்பன் நிலத்தில் காட்டப்பட்டுள்ளது என்றால் சரி தான்.

பார்வை மகசரில் தஞ்சியப்பன் வீடு மற்றும் நிலம் பற்றிய குறிப்பு உள்ளது என்றால் சரி தான். கைப்பற்றுதல் மகசரில் தஞ்சியப்பன் வீட்டின் எந்த திசையில் எந்த பக்கத்தில் என்ற குறிப்பு சொல்லப்படவில்லை என்றால் சரி தான். ஆனால் எதிரியின் வீட்டின் அருகில் கடலை செடி மறைவிடத்தில் என்ற குறிப்பு சொல்லப்பட்டுள்ளது. கைப்பற்றுதல் மகசரில் காட்டப்பட்டுள்ள வழக்கு சொத்தின் விவரம் வேறு கையெழுத்தாக வேறு

மையினால் எழுதப்பட்டுள்ளதா உள்ளது என்றால் சரி தான். ஆனால் ஒரே நபரால் எழுதப்பட்டுள்ளது. ஒரே நபரால் எழுதப்படவில்லை, வேறு நபரால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

குச்சி சம்பந்தமான படிவம் 95ல் 4வது வரியில் மேல் என்று எழுதி அதை அடித்து கீழ் என்பதாகவும், 6வது வரியில் ஒரு வாசகத்தை அடித்து கறை என்ற எழுத்து எழுதப்பட்டுள்ளது என்றால் மேல் என்ற வார்த்தை எழுதப்படவும் இல்லை அடிக்கப்படவும் இல்லை. 4வது மற்றும் 6வது வரி திருத்தங்கள் பார்க்கும்போதே தெரிகிறது என்றாலும், நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

சாட்சி சாமி வடமாதிமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றதற்கான ஆதாரங்கள் எதையும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்படவும் இல்லை, அதற்கான மருத்துவரை இவ்வழக்கில் சாட்சியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை என்றாலும் விசாரணை செய்யப்பட்டது. விசாரித்ததில் வடமாதிமங்கலம் அரசு மருத்துவமனையில் சாட்சி சாமி முதலுதவி மட்டும் பெற்றது தெரியவந்தது. முதலுதவிக்கு பிறகு ஆரணி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை அளித்த டாக்டர் ராஜராஜன் அவர்களை விசாரணை செய்துள்ளேன்.

வடமாதிமங்கலம் அரசு மருத்துவமனை விபத்து பதிவேடு பெற்றேனா என்றால் விபத்து பதிவேடு பதியப்படவில்லை. வடமாதிமங்கலம் அரசு மருத்துவமனையில் விபத்து பதிவேடு பதிவு செய்யப்பட்டது, அந்த பதிவில் வேறு காரணங்கள் என்பதால் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரேத விசாரணை எங்கு மேற்கொள்ளப்பட்டது என்றால்

ஆரணி அரசு மருத்துவமனையில். பிரேத பரிசோதனை எங்கு மேற்கொள்ளப்பட்டது என்றால் வேலூர் அரசு மருத்துவமனையில். எதற்காக பிரேதம் வேலூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டதற்கான காரணம் தெரிவிக்கப்படவில்லை என்றால் அரசு மருத்துவமனை சார்ந்த விஷயம். மேலும் வேலூர் அரசு மருத்துவமனையில் தடய அறிவியல் இருப்பதால் அங்கு அனுப்பி வைக்கப்பட்டது.

நான் சொல்வது பொய் என்றாலும், ஆரணி அரசு மருத்துவமனைக்கு பிரேதத்தை கொண்டு போகவில்லை என்றாலும், இறந்த நபர் உயிருடன் இருக்கும்போதே வேலூருக்கு அழைத்து செல்லப்பட்டார் என்றாலும், நான் ஆரணி அரசு மருத்துவமனையில் பிரேத விசாரணை மேற்கொண்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. பிரேத விசாரணை அறிக்கை மற்றும் பிரேத பரிசோதனை அறிக்கையில் ஆரணி அரசு மருத்துவமனைக்கு வந்ததும் சென்றதும் குறிப்பு உள்ளது.

பிரேத பரிசோதனை அறிக்கையில் ஆரணியில் இருந்து கொண்டு சென்ற குறிப்பு இல்லை என்றால் சரியல்ல. எதிரியின் மனைவி சாட்சி சாமியின் மீதும், இறந்தவர் மீதும் கொடுக்கப்பட்ட புகாருக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரி தான். அந்த புகாருக்கு இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் கோப்பை பார்த்தால் தான் சொல்ல முடியும். அந்த விசாரணை அதிகாரிக்கு தான் அது தெரியும்.

வழக்கு எதிர் வழக்கு என்ற நிலையில் ஒரே விசாரணை அதிகாரி தான் புலன்விசாரணை மேற்கொள்ளவேண்டும் என்றால் எதிரியின் மனைவி கொடுத்த வழக்கு எதிர் வழக்கு அல்ல. தனி வழக்கு. எதிரியின் மனைவி

கொடுத்த புகாரின் முதல் தகவல் அறிக்கையும் இவ்வழக்கில் காட்டப்படவில்லை என்றால் சரி தான். எதிரியின் மனைவி கொடுத்த புகார் எதிர் வழக்கு என்றாலும், நான் தனி வழக்கு என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

சம்பவ இடத்தில் இருந்து வேலூர் அரசு மருத்துவமனைக்கு பிரேதம் கொண்டு சென்றதற்கான ஆவணங்களோ, குறிப்போ இல்லை என்றால் சரியல்ல. பிரேத விசாரணை அறிக்கையில் ஆயுதத்தை பற்றிய குறிப்பில் சவுக்கு கொம்பின் மேல்பகுதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் இரண்டு துண்டாக உடைந்த நாட்டு சவுக்கு கொம்பின் மேல்பகுதி என்று சொல்லியுள்ளேன். பிரேத விசாரணை அறிக்கையில் காயம் பற்றிய விவரத்தில் ஒரு காயம் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரி தான்.

இறுதி அறிக்கையிலும் இறந்த நபருக்கு ஒரு காயம் மட்டும் தான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பிரேத பரிசோதனை அறிக்கையில் முதல் பகுதியில் இரண்டு காயமும், இரண்டாவதாக தலைக்காயத்தையும் மற்றும் தலையின் உட்புற காயம் பற்றி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-.K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.